TNSMART PREP

## அரசு தேர்வுகளுக்கான ஸ்மார்ட் வழிகாட்டி

- **TN Smart Prep** என்பது அரசு வேலைவாய்ப்பு தேர்வுகளுக்குத் தயாராகும் மாணவர்களுக்கும் இளைஞர்களுக்கும் வடிவமைக்கப்பட்ட ஒரு ஸ்மார்ட் வழிகாட்டி.
- இந்தப் புத்தகம் வழியாக **TNPSC, VAO, Group 4, Police, RRB** போன்ற தேர்வுகளுக்குத் தேவையான அடிப்படை அறிவு மற்றும் முக்கிய குறிப்புகளை எளிய முறையில் கற்றுக்கொள்ளலாம்.
- ஒவ்வொரு தலைப்பும் தேர்வில் கேட்கப்படும் வினாக்களை மனதில் கொண்டு, தெளிவான விளக்கங்களுடன் சுருக்கமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.
- இது உங்கள் நேரத்தை மிச்சப்படுத்தும் வகையில் **"Smart Preparation"** முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

**வெளியீடு**

**TN Smart Prep** குழு

| தேசிய முன்னோடிகள் (National Leaders) | | | |
|---|---|---|---|
| வரிசை எண் | தலைவர் பெயர் | பக்கம் எண் | |
| | | PYQ Points | Original PYQ |
| 1 | மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி | 1 - 10 | 11 - 55 |
| 2 | தாதாபாய் நவரோஜி | 56 - 57 | 58 - 63 |
| 3 | சுரேந்திரநாத் பானர்ஜி | 64 - 64 | 65 - 66 |
| 4 | மகாதேவ் கோவிந்த் ராணடே | 67 - 68 | 69 - 75 |
| 5 | கோபால் கிருஷ்ண கோகலே | 76 - 77 | 78 - 81 |
| 6 | ஆச்சார்ய வினோபா பாவே | 82 - 82 | 83 - 83 |
| 7 | கான் அப்துல் கஃபார் கான் | 84 - 84 | 85 - 86 |
| 8 | ரபீந்திரநாத் தாகூர் | 87 - 87 | 88 - 90 |
| 9 | மௌலானா அபுல் கலாம் ஆசாத் | 91 - 92 | 93 - 99 |
| 10 | சரோஜினி நாயுடு | 100 - 100 | 101 - 102 |
| 11 | ஸ்ரீ அரவிந்தோ கோஷ் | 103 - 103 | 104 - 104 |
| 12 | பால் கங்காதர் திலக் | 105 - 105 | 106 - 108 |

| வரிசை எண் | தலைவர் பெயர் | பக்கம் எண் | |
|---|---|---|---|
| | | PYQ Points | Original PYQ |
| 13 | லாலா லஜ்பத் ராய் | 109 - 109 | 110 - 111 |
| 14 | சித்தரஞ்சன் தாஸ் | 112 - 112 | 113 - 114 |
| 15 | ஜவஹர்லால் நேரு | 115 - 117 | 118 - 132 |
| 16 | சுபாஷ் சந்திர போஸ் | 133 - 136 | 137 - 150 |
| 17 | பகத் சிங் | 151 - 152 | 153 - 163 |
| 18 | சர்தார் வல்லபாய் பட்டேல் | 164 - 164 | 165 - 168 |
| 19 | பீம்ராவ் ராம்ஜி அம்பேத்கர் | 169 - 171 | 172 - 182 |

# மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி

- மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி, தன்னுடைய வழக்கறிஞர் தொழிலின் முதல் வருமானமாக பெற்ற ரூ.30 யை தன்னுடைய கட்சிக் காரருக்கே பம்பாய் கோர்ட்டில் திருப்பிக் கொடுத்துவிட்டார்.

- காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவில் தனது வழக்குரைஞர் தொழில் துவங்க தாதா அப்துல்லா என்ற வியாபார நிறுவனம் உதவியது.

- தென்னாப்பிரிக்காவில் பீட்டர்மரிட்ஸ்பர்க் இரயில் நிலையத்தில் காந்தி இரயிலில் இருந்து வெளியேற்றப்பட்டார்

- தென் ஆப்பிரிக்காவில் காந்தியின் சட்டமறுப்பு இயக்கத்துக்கு ஹென்றி டேவிட் தாரோ -வின் படைப்பு உத்வேகத்தை கொடுத்தது.

- காந்தியடிகள் டிரான்ஸ்வாலில் உள்ள நியாயமற்ற சட்டங்களை எதிர்த்து போராடினார்.

- காந்தியடிகள் முதல் முறையாக இனவெறி செயலை பீட்டர்மாரிட்ஸ்பர்க் இரயில் நிலையத்தில் எதிர் கொண்டார்.

- காந்தியடிகள் ரஸ்கின் அவர்களால் பெரிதும் ஈர்க்கப்பட்டு ஃபீனிக்ஸ் குடியிருப்பை நிறுவினார்.

- விவசாயிகளுக்கு கேராவில் வரி இல்லா பிரச்சாரத்தை ஏற்பாடு செய்ய சர்தார் படேலிடம் இருந்து காந்தி உதவி பெற்றார்.

- ஜாலியன் வாலாபாக் படுகொலை நிகழ்ந்த ஆண்டு 13 ஏப்ரல் 1919 ஆகும்.

- வன்முறை இல்லாமல் அநீதியை எதிர்த்துப் போராடும் புதிய சத்தியாகிரக வழியை காந்தி மக்களுக்குக் காட்டினார்.

- உழவர் வகை சமூக இயக்கம் காந்திய தேசியத்திற்கு பெரிதும் பங்களித்தது.

- இந்தியாவில் நடந்த முதல் சத்தியாகிரக இயக்கம் - சம்பரான் சத்தியாகிரகம்

- ஜாலியன் வாலாபாக் படுகொலை பற்றி விசாரிக்க பிரிட்டிஷ் அரசாங்கம் நியமித்த குழுவின் பெயர் - ஹன்டர் குழு

- காந்தியின் பொருளாதார திட்டத்தின் சின்னம் காதி

- வடக்கு பீகாரில் விவசாயிகளின் இயக்கத்தை காந்தி தொடங்கினார்

- சத்தியாகிரகம் என்ற சொல் உண்மை மற்றும் உண்ணாவிரதம் கடைபிடித்தல் என்ற இரண்டு சொற்களின் இணைவு ஆகும். சத்தியாகிரகத்தின் அடிப்படை அஹிம்சை என்பதை காந்தி இவ்வாறு விளக்குகிறார். "ஒரு மனிதன் அஹிம்சைவாதியானால் தன்னை காயப்படுத்துபவர்களிடம் கோபம் கொள்ளாமல் இருப்பது. அவன் அவனுக்கு தீங்கு செய்ய விரும்பவில்லை. அவன் நன்றாக இருக்க வேண்டும் என விரும்புகிறான்". என்பது ஆகும்.

- சத்தியாகிரகம் என்பது அனைவரிடத்திலும் அன்பு செலுத்துவது ஆகும்

- 1919-ல் காந்தியடிகள் தலைமையில் இந்திய தேசிய இயக்கம் மிகப்பெரும் மக்கள் இயக்கமாக மாறியது.
- ஒத்துழையாமை இயக்கத்தின் போது காந்திஜி கெய்சர்-இ-ஹிந்த் என்ற பட்டத்தை திருப்பி அளித்தார்.
- மகாத்மா காந்திஜி அவர்களால் கொண்டு வரப்பட்ட பள்ளி, கல்லூரிகள், சட்டமன்ற புறக்கணிப்புப் போராட்டத்திற்கு ஒத்துழையாமை இயக்கம் என்று பெயர்.
- "இந்தியர்களின் ஒத்துழைப்போடு ஆங்கிலேயரின் ஆட்சி நிறுவப்பட்டது. இந்த ஒத்துழைப்பினால் தான் இந்த ஆட்சி பிழைத்துகொண்டிருக்கிறது. இந்தியர்கள் ஒத்துழைக்க மறுத்தால், இந்தியாவில் ஆங்கிலயரின் ஆட்சி ஒரு வருடத்தில் வீழ்ந்து சுயராஜ்ஜியம் மலரும்" என்று கூறியவர் மகாத்மா காந்திஜி ஆவார்.
- ரேபரேலி விவசாயிகள் அடிமைகளாக நடத்தப்பட்டனர்.
- புரட்சியாளர்களுக்கு ஒத்துழையாமை இயக்கம் ஒரு உத்வேகத்தை அளித்தது.
- 1921-ல் மாப்ளா கலகம் கேரளாவில் நடைபெற்றது.
- 1922-ல் மகாத்மா காந்தி ஒத்துழையாமை இயக்கத்தை தற்காலிகமாக ரத்து செய்து விட்டார்.

- 1922-ல் மகாத்மா காந்தி சவுரி சவுரா நிகழ்வால் ஒத்துழையாமை இயக்கத்தை நிறுத்தினார்.

- இந்திய தேசியவாத இயக்கம் அதன் வரலாற்றில் முதல் முறையாக ஒத்துழையாமை இயக்கத்தின் போது மாபெறும் கூட்டத்தை பெற்றது.

- காந்தி - இர்வின் ஒப்பந்தம் ஆனது சட்ட மறுப்பு இயக்கம் காந்தியினால் ஒத்திவைப்பதற்கு காரணமாயிருந்தது.

- கி.பி. 1931 ஆம் ஆண்டின் இரண்டாவது வட்ட மேஜை மாநாடு வெலிங்டன் பிரபு இந்தியாவின் வைஸ்ராயாக இருந்த போது நடைபெற்றது.

- இந்திய தேசிய காங்கிரசின் பிரதிநிதியாக காந்தி இரண்டாவது வட்ட மேஜை மாநாட்டில் கலந்து கொண்டார்.

- முதல் வட்டமேசை மாநாட்டை இந்திய தேசிய காங்கிரஸ் புறக்கணித்தது.

- காந்திஜி இரண்டாவது வட்ட மேசை மாநாட்டில் பங்கேற்றார்.

- கம்யூனல் அவார்டு மூன்றாம் வட்ட மேசை மாநாடோடு தொடர்புடையது.

- 1932 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 17 ஆம் நாள் வகுப்புவாத கொடையை அறிவித்த பிரிட்டிஷ் பிரதம மந்திரி ராம்சே மெக்டொனால்ட் ஆவார்.

- 1930ல் நடந்த சட்ட மறுப்பு இயக்கத்தின்போது மகாத்மா காந்தி கைது செய்யப்பட்ட பின் அதனை தலைமை தாங்கி நடத்திச் சென்றவர் அப்பாஸ் தயாப்ஜி ஆவார்.

- காந்தி இர்வின் ஒப்பந்தம் 5 மார்ச் 1931-ல் கையெழுத்தானது.

- காந்தியடிகள் யாத்திரையாக நடந்து தண்டியை 25வது நாளில் அதாவது 1930 ஏப்ரல் 6 இல் சென்று அடைந்தார்.

- ராம்சே மேக்டோனால்ட் வழங்கிய வகுப்புவாரி ஒதுக்கீடை காந்தியடிகள் எதிர்த்தார்.

- தண்டி யாத்திரை "போராட்டத்தை, "மழலையர் பள்ளியின் மேடைப் போராட்டம்" என பிரிட்டிஷ் பத்திரிக்கைகள் கேலி செய்தனர்.

- 1927 மெட்ராஸ்-ல் நடைபெற்ற இந்திய தேசிய காங்கிரசுக்கு தலைமை தாங்கியவர் டாக்டர் அன்சாரி ஆவார்.

- இந்தியாவிற்கு சுதந்திரம் தர வேண்டும் என்ற தீர்மானத்தை காங்கிரஸ் காரிய கமிட்டி வார்தா சந்திப்பில் நிறைவேற்றியது.

- அனைத்து வங்காள சட்ட மறுப்பு குழுவை உருவாக்கியவர் ஜ.மோ. சென்குப்தா ஆவார்.

- ராம்சே மெக்டொனால்ட் வகுப்புவாத பிரிவினை அறிவிக்கப்பட்டது.இந்த நிகழ்வு, 1932 ஆம் ஆண்டு, செப்டம்பர் மாதம் எர்வாடா சிறையில் காந்தி சாகும் வரை உண்ணாவிரதத்தை மேற்க்கொள்வதற்கான முக்கிய காரணமாக அமைந்தது.

- வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் மூலமாக "செய் அல்லது செத்துமடி". என்னும் பிரச்சாரம் அறியப்பட்டது.

- வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் கதாநாயகி எனக் கருதப்படுபவர் அருணா ஆசப் அலி ஆவார்.

- வெள்ளையனே வெளியேறு இயக்கமானது "காங்கிரஸின் கலகம்" என்று குறிப்பிடப்பட்டது.

- வெள்ளையனே வெளியேறு தீர்மானத்தை வடிவமைத்தவர் காந்திஜி ஆவார்.

- 1942ஆம் ஆண்டு ஆகஸ்ட் 8 ஆம் நாள் காங்கிரசு 'வெள்ளையனே வெளியேறு' தீர்மானத்தை இயற்றியது. காரணங்கள் : கிரிப்ஸ் தூதுக்குழுவின் தோல்வி, இந்தியாவை நோக்கி ஜப்பானியப் படைகள் புறப்பட்டதனால், ஆங்கிலேயர்கள் இந்தியர்களின் விடுதலை கோரிக்கையை ஏற்றுக் கொள்ள கட்டாயப்படுத்துவதற்காக.

- தென் இந்தியாவில் மேற்கு கோதாவரி மாவட்டத்தில் உள்ள பீமாவரம், இயக்கத்தின் புயல் மையமாக இருந்தது. கொல்லங்கோட்டில், ஊர்வலமாகச் சென்ற மாணவர்கள் தங்கள் சட்டை பொத்தான்களை சுழற்றி  காவல்துறையின் தோட்டாக்கள் நிறைந்த துப்பாக்கிகளுக்கு மார்பைக் காட்டினர். தமிழ்நாட்டில் உள்ள புகழ்பெற்ற பக்கிங்ஹாம் மற்றும் மெட்ராஸில் உள்ள கர்நாடக ஆலைகள் உட்பட கிட்டத்தட்ட அனைத்து ஆலைகளும் வேலை நிறுத்தம் செய்தன. கோயம்புத்தூரில் உள்ள இராணுவ விமான நிலையமும் முற்றிலும் எரிந்து நாசமாக்கப்பட்டது. - { வெள்ளையனே வெளியேறு இயக்கம் }

- காங்கிரஸ் கட்சியின் வானொலியில் பணியாற்றிய திடுக்கிடும் செய்தியை வாசிப்பதில் தேர்ச்சிப்பெற்ற மற்றும் நேர்த்தியான வார்த்தை உச்சரிப்பை கொண்ட பெண்மணி உஷா மேத்தா ஆவார்.

- வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் போது பம்பாயில் இரகசிய வானொலி நிலையத்தை நடத்தியவர் உஷா மேத்தா ஆவார்.

- அமைச்சரவை தூதுக்குழு திட்டம், "அன்றைய காலச் சூழலில் கொண்டுவரப்பட்ட உன்னதமான திட்டம்" என்று வர்ணித்தவர் காந்தி.

- "ஆங்கிலேயர்கள் இந்தியாவில் இருப்பது, ஜப்பானியர்களை இந்தியாவின் மீது படையெடுக்கும் படியான அழைப்பிதழ்" என்ற வாக்கியங்களை எழுதியவர் மகாத்மா காந்தி.

- கிரிப்ஸ் தூதுக் குழுவின் தீர்மானத்தைப் "பின் தேதியிட்ட காசோலை" என்று கூறியவர் காந்திஜி.

- 1947 இந்திய சுதந்திர தின அதிகாரப்பூர்வ நிகழ்வுகளில் பங்கேற்காதவர் மகாத்மா காந்தி.

- புகழ்பெற்ற "வெள்ளையனே வெளியேறு" இயக்க போராட்டத்தை பம்பாய் காங்கிரஸ் கமிட்டி முடிவு செய்தது.

- வெள்ளையனே வெளியேறு இயக்கம் ஆகஸ்ட் புரட்சி என்றும் அழைக்கப்பட்டது.

- அஇகாகு (அகில இந்தியக் காங்கிரஸ் குழு) ஆகஸ்ட் 8-ல் பம்பாயில் கூடிய கூட்டத்தில் வெள்ளையனே வெளியேறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

- 1937 ஆம் ஆண்டு மகாத்மா காந்தி தனது 'தி ஹரிஜன்' என்ற பத்திரிக்கையில் தொடர் கட்டுரைகளை வெளியிட்டு, வரதா திட்டம் என்று அழைக்கப்படும் அடிப்படை கல்வித்திட்டத்தை முன்மொழிந்தார்.

- "சுயராஜ்ஜியம் என்பது இந்திய மக்கள் சுதந்திரமாக தங்கள் பிரதிநிதிகள் மூலம் தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்துவதாகும்" - மகாத்மா காந்தி.

- "ஐம்பதாயிரம் நன்கு பயிற்சிப்பெற்ற படைவீரர்களால் என்ன செய்யமுடியவில்லையோ, அதனை மகாத்மா செய்து முடித்தார். அவர் அமைதியை ஏற்படுத்தினார். அவர் ஓர் தனிமனித படை" - மவுண்ட்பேட்டன் பிரபு.

- 1927-ஆம் ஆண்டு காந்தியடிகள் தமிழகத்திற்கு வருகை புரிந்த பொழுது மருத்துவர் முத்துலெட்சுமி ரெட்டி அவர்கள் காந்தியடிகளை சந்தித்து, தனது சமூக நலத்திட்டங்கள் பற்றி கலந்துரையாடினார். இது பற்றிய விபரத்தை காந்தியடிகள் “யங் இந்தியா” என்ற பத்திரிக்கையில் வெளியிட்டார்.

- 'ஹரிஜன்' பத்திரிக்கை காந்திஜி ஆல் தொடங்கப்பட்டது.

- 'தென்னாப்பிரிக்காவில் சத்யாகிரகம்' என்னும் நூலை மகாத்மா காந்தி 1928-ல் வெளியிட்டார்.

- சமூகத்தில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்திய வரலாற்று நிகழ்வான "காந்தி ஜின்னா பேச்சுவார்த்தை" பற்றிய காந்தியின் நேர்காணலை நியூஸ் குரோனிக்கள் பத்திரிக்கை, லண்டன் ஜூலை 4, 1944-ல் வெளியிட்டது.

- நான் சமூக சேவையில் முழுமையாக ஈடுபட்டிருந்தால் அதற்குக் காரணம் சுய உணர்தலுக்கான எனது விருப்பமே. சேவையின் மூலம் மட்டுமே கடவுளை உணர முடியும் என்று நான் உணர்ந்ததால், நான் சேவை என்ற மதத்தை எனது சொந்த மதமாக்கினேன். எனக்குச் சேவை என்பது இந்திய சேவை. ஏனென்றால் நான் அதைத் தேடாமலே அது என்னிடம் வந்தது. காரணம் அதற்கான தகுதி என்னிடம் இருந்தது. - மகாத்மா காந்தி.

- "சில சாதாரண இளைஞர்களுக்குத் திருமணம் செய்து கொடுக்கும் நோக்கத்திற்காகத் தங்கள் மகள்களை முற்றிலும் அறியாமை மற்றும் படிப்பறிவில்லாத நிலையில் வைக்கும் பெற்றோரின் குற்றம் சார்ந்த அலட்சியத்திற்காக வருந்துகிறேன்". - மகாத்மா காந்தி

- தங்கள் மகள்களின் ஒட்டு மொத்த வளர்ச்சிக்குத் தேவையான கடும் நடவடிக்கைகளைப் பெற்றோர் எடுக்க வேண்டும். - மகாத்மா காந்தி

- "பெண்களைப் பலவீனமான பாலினம், என்று சொல்வது ஒரு அவதூறு; அது பெண் இனத்திற்கு ஆணினம் இழைக்கும் அநீதியாகும்" - மகாத்மா காந்தி

- சுபாஷ் சந்திர போஸ் முதல் முதலில் காந்திஜியை தேசத் தந்தை என அழைத்தார்

- ரபீந்திர நாத் தாகூர் முதல் முதலில் காந்திஜியை "மகாத்மா" என்று அழைத்தார்.

- சாம்பராண் சத்தியாகிரகம் - 1917

- கேதா சத்தியாகிரகம் - 1918
- அகமதாபாத் மில் வேலைநிறுத்தம் - 1918
- ரவுலட் சட்ட சத்தியாகிரகம் - 1919
- சௌரி சௌரா - 1922
- தண்டி சத்யாகிரகம் - 1930
- வகுப்புவாத விருது - 1932
- பர்தோலி தீர்மானம் - 1922
- வைசாக் புரட்சி - 1923
- பர்தோலி சத்யாகிரகம் - 1929-1930.
- கைரா சத்யாகிரகம் -1918.

145. Arrange the launching of the following events in chronological order:
பின்வரும் நிகழ்வுகளைச் சரியான கால வரிசைப்படி அமைத்து கொடுக்கப்பட்டுள்ள விடைகளிலிருந்து சரியானதைத் தேர்ந்தெடுக்கவும்.

(i) The Champaran Satyagraha
சம்பரான் சத்தியாகிரகம்

(ii) The Mahad Satyagraha
மகத் சத்தியாகிரகம்

(iii) The Dandi Salt Satyagraha
தண்டி உப்புச் சத்தியாகிரகம்

(iv) The Kheda Satyagraha
கேதா சத்தியாகிரகம்

(A) (ii), (iii), (iv), (i)

(B) (iii), (ii), (i), (iv)

(C) (i), (iv), (ii), (iii)

(D) (i), (ii), (iv), (iii)

(E) Answer not known
விடை தெரியவில்லை

104. Name the Committee appointed by the British Government to enquire about the Jallianwala Bagh Massacre.

(A) Dar Committee

(B) Hunter Committee

(C) Rai Committee

(D) Simon Committee

(E) Answer not known

ஜாலியன் வாலாபாக் படுகொலை பற்றி விசாரிக்க பிரிட்டிஷ் அரசாங்கம் நியமித்த குழுவின் பெயர்

(A) தார் குழு

(B) ஹன்டர் குழு

(C) ராய் குழு

(D) சைமன் குழு

196. Which of the following statements are true about Mahatma Gandhi?

(i) Khadi is the symbol of the economic programme of Gandhi

(ii) Gandhi started peasant movement in North Bihar

(iii) Gandhi wrote about 'Quit India' in New India

(iv) Gandhi's Satyagraha Movement was against Indian National Congress

(A) (i) and (iv) only

(B) (i) and (ii) only

(C) (ii), (iii) and (iv) only

(D) (i) and (iii) only

(E) Answer not known

பின்வருவனவற்றுள் மகாத்மா காந்தியைப் பற்றிய சரியானக் கூற்றுகள் எவை?

(i) காந்தியின் பொருளாதார திட்டத்தின் சின்னம் காதி

(ii) வடக்கு பீகாரில் விவசாயிகளின் இயக்கத்தை காந்தி தொடங்கினார்

(iii) நியூ இந்தியாவில் காந்தி வெள்ளையனே வெளியேறு பற்றி எழுதினார்

(iv) காந்தியின் சத்தியாகிரக இயக்கம் இந்திய தேசிய காங்கிரஸிற்கு எதிரானது

(A) (i) மற்றும் (iv) மட்டும்

(B) (i) மற்றும் (ii) மட்டும்

(C) (ii), (iii) மற்றும் (iv) மட்டும்

(D) (i) மற்றும் (iii) மட்டும்

(E) விடை தெரியவில்லை

175. Directions for the following item :

Read the following passage and answer the item that follow. Your answers to this item should be based on the passage only.

Passage – I

The word Satyagraha is a compound of two words truth and holding fast. Non-violence which forms the very basis of satyagraha is thus explained by Gandhiji – "When a person claims to be non-violent, he is expected not to be angry with one who has injured him. He will not wish him harm : he will wish him well".

Which one of the following is best implied in the passage?

(A) Satyagraha is the law of love for all
(B) Satyagraha is the weapon for agitation
(C) Satyagraha is the weapon of weaker section
(D) Satyagraha is the physical force
(E) Answer not known

பின்வருவனவற்றிற்கான வழிமுறைகள் :

பின்வரும் பத்தியை வாசித்து அதற்கான விடையை அளிக்கவும். உங்களது விடை பின்வருகின்ற பத்திகளுக்கு தொடர்புடையதாக அமைய வேண்டும்

பத்தி – I

சத்தியாகிரகம் என்ற சொல் உண்மை மற்றும் உண்ணாவிரதம் கடைபிடித்தல் என்ற இரண்டு சொற்களின் இணைவு ஆகும். சத்தியாகிரகத்தின் அடிப்படை அஹிம்சை என்பதை காந்தி இவ்வாறு விளக்குகிறார். "ஒரு மனிதன் அஹிம்சைவாதியானால் தன்னை காயப்படுத்துபவர்களிடம் கோபம் கொள்ளாமல் இருப்பது. அவன் அவனுக்கு தீங்கு செய்ய விரும்பவில்லை. அவன் நன்றாக இருக்க வேண்டும் என விரும்புகிறான்". என்பது ஆகும்.

பின்வருபனவற்றுள் எது ஒன்று இந்தப் பத்தியில் சிறப்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளது?

(A) சத்தியாகிரகம் என்பது அனைவரிடத்திலும் அன்பு செலுத்துவது ஆகும்
(B) போராட்டத்தின் மிகப்பெரிய ஆயுதம் சத்தியாகிரகம்
(C) நலிந்த பிரிவினரின் ஆயுதம் சத்தியாகிரகம்
(D) சத்தியாகிரகம் உடற் சத்தியாகும்
(E) விடை தெரியவில்லை

176. Indian Nationalist Movement in 1919, entered into a Mass phase under the leadership of ———.

(A) W.C. Bannerjee
(B) Bal Gangadhar Tilak
(C) Jawaharlal Nehru
(D) Gandhiji
(E) Answer not known

1919-ல் எந்த தலைவர் தலைமையில் இந்திய தேசிய இயக்கம் மிகப்பெரும் மக்கள் இயக்கமாக மாறியது?

(A) W.C. பானர்ஜி
(B) பாலகங்காதர திலகர்
(C) ஜவஹர்லால் நேரு
(D) காந்தியடிகள்
(E) விடை தெரியவில்லை

TNSMART
PREP

1. Arrange the following events in chronological order :

(i) Swadeshi Movement

(ii) Home Rule Movement

(iii) Non-Cooperation Movement

(iv) Civil Disobedience Movement

(A) ✓ (i), (ii), (iii), (iv)

(B) (ii), (iii), (iv), (i)

(C) (iii), (iv), (i), (ii)

(D) (iii), (ii), (i), (iv)

(E) Answer not known

பின்வரும் நிகழ்வுகளை காலமுறைப்படி பட்டியலிடுக.

(i) சுதேசி இயக்கம்

(ii) தன்னாட்சி இயக்கம்

(iii) ஒத்துழையாமை இயக்கம்

(iv) சட்ட மறுப்பு இயக்கம்

(A) (i), (ii), (iii), (iv)

(B) (ii), (iii), (iv), (i)

(C) (iii), (iv), (i), (ii)

(D) (iii), (ii), (i), (iv)

TNSMART PREP

196. Match the following events:
பின்வரும் நிகழ்வுகளை பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | Vizah Revolution<br>வைசாக் புரட்சி | 1. | 1929 – 1930<br>1929 – 1930 |
| (b) | Chauri Chaura<br>சௌரி சௌரா | 2. | 1918<br>1918 |
| (c) | Bardoli Satyagraha<br>பர்தோலி சத்யாகிரகம் | 3. | 1923<br>1923 |
| (d) | Satyagraha of Kaira<br>கைரா சத்யாகிரகம் | 4. | 1922<br>1922 |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 2 | 1 |
| (B) | 3 | 4 | 1 | 2 |
| (C) | 2 | 4 | 3 | 1 |
| (D) | 4 | 2 | 3 | 1 |

109. Which award did Gandhi return during the Non-Co-operation Movement?
ஒத்துழையாமை இயக்கத்தின் போது காந்திஜி எந்த பட்டத்தை திருப்பி அளித்தார்?

(A) Knighthood
நைட்குட்

(B) Raj Bahadur
ராய் பகதூர்

(C) Kaiser-e-Hind
கெய்சர்-இ-ஹிந்த்

(D) Hind Kesari
ஹிந்த் கெய்சர்

197. When was the first non-co-operation movement started in India?
இந்தியாவில் எப்பொழுது முதல் ஒத்துழையாமை இயக்கம் தொடங்கப்பட்டது

(A) 1921
(B) 1920
(C) 1922
(D) 1925

35. What was the name given to the boycott of schools and colleges announced by Gandhiji?

(A) Civil Disobedience Movement

(B) Quit India Movement

(C) Non-Cooperation Movement

(D) Champaran Satyagraha

(E) Answer not known

மகாத்மா காந்திஜி அவர்களால் கொண்டு வரப்பட்ட பள்ளி, கல்லூரிகள், சட்டமன்ற புறக்கணிப்புப் போராட்டத்திற்கு பெயர் என்ன?

(A) சட்டமறுப்பு இயக்கம்

(B) வெள்ளையனே வெளியேறு இயக்கம்

(C) ஒத்துழையாமை இயக்கம்

(D) சம்பரான் போராட்டம்

172. "British rule was established in India with the cooperation of Indians, and had survived only because of this co-operation. If Indians refused to co-operate, British rule in India would collapse with in a year and Swaraj would come," who said this?

(A) Sardar Vallabhai Patel

(B) Motilal Nehru

(C) Mahatma Gandhiji

(D) Bal Gangadhar Tilak

(E) Answer not known

"இந்தியர்களின் ஒத்துழைப்போடு ஆங்கிலேயரின் ஆட்சி நிறுவப்பட்டது, இந்த ஒத்துழைப்பினால் தான் இந்த ஆட்சி பிழைத்துகொண்டிருக்கிறது. இந்தியர்கள் ஒத்துழைக்க மறுத்தால், இந்தியாவில் ஆங்கிலேயரின் ஆட்சி ஒரு வருடத்தில் வீழ்ந்து சுயராஜ்ஜியம் மலரும்" என்று கூறியவர் யார்?

(A) சர்தார் வல்லபாய் பட்டேல்

(B) மோதிலால் நேரு

(C) மகாத்மா காந்திஜி

(D) பால கங்காதர திலகர்

(E) விடை தெரியவில்லை

175. With regard to the Rae Bareilly peasant movement, which of the following statements are true?

1. The Rae Bareilly peasants were treated as serfs
2. The non-cooperation movement provided impetus to the rebels
3. It took place in the districts of Madhya Pradesh

(A) 1 only
(B) 2 only
(C) Both 1 and 2
(D) 1, 2 and 3
(E) Answer not known

ரேபரேலி விவசாயி இயக்கத்தின் படி பின்வரும் எந்த வாக்கியங்கள் உண்மையானவை?

1. ரேபரேலி விவசாயிகள் அடிமைகளாக நடத்தப்பட்டனர்
2. புரட்சியாளர்களுக்கு ஒத்துழையாமை இயக்கம் ஒரு உத்வேகத்தை அளித்தது
3. இப்புரட்சி மத்திய பிரதேச மாவட்டங்களில் நடந்தது

(A) 1 மட்டும்
(B) 2 மட்டும்
(C) 1 மற்றும் 2
(D) 1, 2 மற்றும் 3

TNSMART PREP

27. The Moplah Rebellion of 1921 brokeout in

(A) Assam
(B) Kerala
(C) Punjab
(D) Bengal
(E) Answer not known

1921-ல் மாப்ளா கலகம் எந்த இடத்தில் நடைபெற்றது

(A) அஸ்ஸாம்
(B) கேரளா
(C) பஞ்சாப்
(D) வங்காளம்

94. Assertion [A] : 1922 Mahatma Gandhi suspended the non co-operation movement

வலியுறுத்தல் [A] : 1922–ல் மகாத்மா காந்தி ஒத்துழையாமை இயக்கத்தை தற்காலிகமாக ரத்து செய்து விட்டார்.

Reason [R] : C.R. Dass and Motilal Nehru resented the movement

காரணம் [R] : சி.ஆர். தாஸ் மற்றும் மோதிலால் நேரு அந்த இயக்கத்தை வெறுத்தனர்.

(A) Both [A] and [R] are true and [R] is the correct explanation of [A]
[A] மற்றும் [R] ஆகிய இரண்டும் உண்மை மேலும் [R] என்பது [A] இன் சரியான விளக்கமாகும்

(B) Both [A] and [R] are true but [R] is not a correct explanation of [A]
[A] மற்றும் [R] ஆகிய இரண்டும் உண்மை ஆனால் [R] என்பது [A] இன் சரியான விளக்கமல்ல

(C) [A] is true but [R] is false
[A] உண்மை; ஆனால் [R] தவறு

(D) [A] is false but [R] is true
[A] தவறு; ஆனால் [R] உண்மை

(E) Answer not known
விடை தெரியவில்லை

195. Reason and Assertion type :

Assertion [A] : Mahatma Gandhi suspended the Non-Cooperation movement in 1922 due to Chauri Chaura Incident

Reason [R] : Subhash Chandra Bose and some other leaders opposed the idea of Non-Violent struggle

(A) [A] is true [R] is false

(B) Both [A] and [R] are true and [R] is the correct explanation of [A]

(C) [A] is false, [R] is true

(D) Both [A] and [R] are true, but [R] is not the correct explanation of [A]

(E) Answer not known

காரணம் மற்றும் கூற்று :

கூற்று [A] : 1922-ல் மகாத்மா காந்தி சவுரி சவுரா நிகழ்வால் ஒத்துழையாமை இயக்கத்தை நிறுத்தினார்.

காரணம் [R] : சுபாஷ் சந்திரபோஸ் மற்றும் சில தலைவர்கள் வன்முறையற்ற போராட்டம் என்ற கருத்தை எதிர்த்தனர்.

(A) [A] சரி [R] தவறு

(B) [A] மற்றும் [R] இரண்டும் சரி மற்றும் [R] என்பது [A]-யினுடைய சரியான விளக்கம்

(C) [A] தவறு [R] சரி

(D) [A] மற்றும் [R] இரண்டும் சரி, ஆனால் [R] – [A]-யினுடைய சரியான விளக்கமல்ல

(E) விடை தெரியவில்லை

102. Which company helped Gandhi to do his legal practice in South Africa?
(A) Dada Abdulla Company
(B) Tata and Birla Company
(C) Malabar Tea Company
(D) Surath Textile Company
(E) Answer not known

காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவில் தனது வழக்குரைஞர் தொழில் துவங்க உதவிய வியாபார நிறுவனம் எது?
(A) தாதா அப்துல்லா நிறுவனம்
(B) டாட்டா மற்றும் பிர்லா நிறுவனம்
(C) மலபார் தேயிலை நிறுவனம்
(D) சூரத் ஜவுளி நிறுவனம்

124. As a lawyer Mohandas Karam Chand Gandhi, got his first fees of Rs. 30, but he refunded that to his client in ——— court.

மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி, தன்னுடைய வழக்கறிஞர் தொழிலின் முதல் வருமானமாக பெற்ற ரூ.30 யை தன்னுடைய கட்சிக் காரருக்கே ——— கோர்ட்டில் திருப்பிக் கொடுத்துவிட்டார்.

(A) Bombay
பம்பாய்
(B) Delhi
டெல்லி
(C) Rajkot
இராஜ்கோட்
(D) Durban
டர்பன்

TNSMART PREP

104. Reason and Assertion type :

வலியுறுத்தல் மற்றும் காரணம் வகை :

Assertion [A] : The Indian nationalist movement for the first time in its history acquired a real mass base during the Non-Cooperation Movement.

வலியுறுத்தல் [A] : இந்திய தேசியவாத இயக்கம் அதன் வரலாற்றில் முதல் முறையாக ஒத்துழையாமை இயக்கத்தின் போது மாபெரும் கூட்டத்தை பெற்றது.

Reason [R] : A large number of peasants and workers participated in the Non-Cooperation Movement.

காரணம் [R] : ஒத்துழையாமை இயக்கத்தில் ஏராளமான விவசாயிகள் மற்றும் தொழிலாளர்கள் கலந்து கொண்டனர்.

(A) [A] is true but [R] is false
வலியுறுத்தல் [A] சரி ஆனால் [R] தவறு

(B) Both [A] and [R] are true; and [R] is the correct explanation of [A]
வலியுறுத்தல் [A] மற்றும் காரணம் [R] சரி, காரணம் [R] வலியுறுத்தல் [A] வின் சரியான விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது

(C) [A] is false, [R] is true
வலியுறுத்தல் [A] தவறு ஆனால் காரணம் [R] சரி

(D) Both [A] and [R] are true, but [R] is not correct explanation of [A]
வலியுறுத்தல் [A] காரணம் [R] இரண்டும் சரி ஆனால் காரணம் [R] – வலியுறுத்தல் [A] வின் விளக்கம் கொடுக்கப்படவில்லை

(E) Answer not known
விடை தெரியவில்லை

TNSMART
PREP

145. The civil disobedience movement was suspended by Gandhi due to

சட்ட மறுப்பு இயக்கம் காந்தியினால் ஒத்திவைப்பதற்கு காரணமாயிருந்தது ———— ஆகும்

(A) Gandhi – Ambedkar Pact
காந்தி - அம்பேத்கர் ஒப்பந்தம்

(B) Gandhi – Irwin pact
காந்தி - இர்வின் ஒப்பந்தம்

(C) Gandhi – Wavell pact
காந்தி - வேவல் ஒப்பந்தம்

(D) Gandhi – Mountbatten pact
காந்தி-மௌண்ட்பேட்டன் ஒப்பந்தம்

180. Second Round Table conference of 1931 :
1. It was held during the reign of Lord Wellington as the viceroy of India
2. It was represented by Gandhi on behalf of INC. (Indian National Congress)

Which of the above statement is/are correct?

(A) 1 only correct
(B) 2 only correct
(C) Both 1 and 2 correct
(D) Neither 1 nor 2
(E) Answer not known

கி.பி. 1931 ஆம் ஆண்டின் இரண்டாவது வட்ட மேஜை மாநாடு :
1. வெலிங்டன் பிரபு இந்தியாவின் வைஸ்ராயாக இருந்த போது நடைபெற்றது.
2. இந்திய தேசிய காங்கிரசின் பிரதிநிதியாக காந்தி இம்மாநாட்டில் கலந்து கொண்டார்.

மேற்கண்ட கூற்றுகளில் எது/எவை சரியானவை?

(A) 1 மட்டும்
(B) 2 மட்டும்
(C) 1 மற்றும் 2
(D) 1ம் அல்ல, 2ம் அல்ல

145. The civil disobedience movement was suspended by Gandhi due to

சட்ட மறுப்பு இயக்கம் காந்தியினால் ஒத்திவைப்பதற்கு காரணமாயிருந்தது ———— ஆகும்

(A) Gandhi – Ambedkar Pact
காந்தி - அம்பேத்கர் ஒப்பந்தம்

(B) Gandhi – Irwin pact
காந்தி - இர்வின் ஒப்பந்தம்

(C) Gandhi – Wavell pact
காந்தி - வேவல் ஒப்பந்தம்

(D) Gandhi – Mountbatten pact
காந்தி-மௌண்ட்பேட்டன் ஒப்பந்தம்

89. Arrange in chronological order
    1. Nehru Report
    2. Poona Pact
    3. Simon Commission
    4. Cripps Mission

(A) 1, 2, 3, 4 (B) 3, 2, 4, 1
(C) 3, 1, 2, 4 (D) 2, 1, 4, 3
(E) Answer not known

கால வரிசைப்படி அடுக்குக
1. நேரு அறிக்கை
2. பூனா ஒப்பந்தம்
3. சைமன் குழு
4. கிரிப்ஸ் குழு

(A) 1, 2, 3, 4 (B) 3, 2, 4, 1
(C) 3, 1, 2, 4 (D) 2, 1, 4, 3

177. Which of the following is incorrect?
(A) The Indian National Congress boycotted the First Round Table Congress
(B) Gandhiji attended the Second Round Table Congress
(C) After the Second Round Table conference the Gandhi-Irwin pact was signed
(D) Communal Award was associated with Third Round Table Conference
(E) Answer not known

பின்வருவனவற்றில் தவறானவை எவை?
(A) முதல் வட்டமேசை மாநாட்டை இந்திய தேசிய காங்கிரஸ் புறக்கணித்தது
(B) காந்திஜி இரண்டாவது வட்ட மேசை மாநாட்டில் பங்கேற்றார்
(C) இரண்டாவது வட்ட மேசை மாநாட்டிற்கு பின்பு காந்தி-இர்வின் ஒப்பந்தம் ஏற்பட்டது
(D) கம்யூனல் அவார்டு மூன்றாம் வட்ட மேசை மாநாடோடு தொடர்புடையது
(E) விடை தெரியவில்லை

106. Name the British Prime Minister who announced the Communal Award on 17th Aug. 1932?

1932 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 17 ஆம் நாள் வகுப்புவாத கொடையை அறிவித்த பிரிட்டிஷ் பிரதம மந்திரி யார் என்பதைக் குறிப்பிடவும்.

(A) Ramsay Mcdonald

ராம்சே மெக்டொனால்ட்

(B) Lloyd George

லாய்ட் ஜார்ஜ்

(C) Stanley Baldwin

ஸ்டான்லி பால்டுவின்

(D) A.V. Alexander

A.V. அலெக்ஸாண்டர்

TNSMART PREP

147. The Dandi March of Gandhi from Sabarmathi Ashram started on
காந்தியடிகளின் தண்டியாத்திரை சபர்மதி ஆசிரமத்திலிருந்து எப்போது தொடங்கப்பட்டது?
(A) 12th March 1930
மார்ச் 12, 1930
(B) 12th March 1931
மார்ச் 12, 1931
(C) 12th February 1932
பிப்ரவரி 12, 1932
(D) 12th February 1933
பிப்ரவரி 12, 1933

114. Who led the civil Disobedience movement after Mahatma Gandhi's arrest is 1930?
1930ல் நடந்த சட்ட மறுப்பு இயக்கத்தின்போது மகாத்மா காந்தி கைது செய்யப்பட்ட பின் அதனை தலைமை தாங்கி நடத்திச் சென்றவர் யார்?
(A) Jawaharlal Nehru
ஜவஹர்லால் நேரு
(B) Abbas Tyabji
அப்பாஸ் தயாப்ஜி
(C) Sarojini Naidu
சரோஜினி நாயுடு
(D) Subash Chandra Bose
சுபாஷ் சந்திரபோஸ்

TNSMART PREP

195. Gandhi-Irwin pact was signed on
காந்தி இர்வின் ஒப்பந்தம் எப்போது கையெழுத்தானது?
(A) 5th March 1931
5 மார்ச் 1931
(B) 5th May 1931
5 மே 1931
(C) 5th June 1931
5 ஜூன் 1931
(D) 5th September 1931
5 செப்டம்பர் 1931

106. The Poona pact in 1932 was signed between Mahathma Gandhi and

1932 ஆண்டு பூனா ஒப்பந்தம் மகாத்மா காந்தி மற்றும் இவருடன் உறுதிப்படுத்தப்பட்டது

(A) Tilak
திலகர்

(B) Vinoba Bhave
வினோபா பாவே

(C) Chandra Sekhar Azad
சந்திர சேகர் ஆசாத்

(D) ✓ Ambedkar
அம்பேத்கர்

86. From the following statements state which, statements are correct or incorrect

Statement I : The Dandi March was to cover 395 kms from Gandhi's sabarmati Ashram to Dandi on the Gujarat Coast

Statement II: Gandhi set out on the March and Reached Dandi on the 25th day (i.e) 6 April 1930

(A) Statement I and II are incorrect

(B) Statement I is correct but II is incorrect

(C) Both statement I and II are correct

(D) ✓ Statement I is incorrect, but II is correct

(E) Answer not known

TNSMART PREP

கீழ்க்கண்ட கூற்றுகளில் எது சரி, எது தவறு என குறிப்பிடவும்

கூற்று I : காந்தியடிகளின் சபர்மதி ஆசிரமத்தில் இருந்து குஜராத் கடற்கரையோரம் உள்ள தண்டி வரை 395 கிலோ மீட்டர் தொலைவுக்கு தண்டியாத்திரை நடை பெற இருந்தது

கூற்று II : காந்தியடிகள் யாத்திரையாக நடந்து தண்டியை 25வது நாளில் அதாவது 1930 ஏப்ரல் 6 இல் சென்று அடைந்தார்

(A) கூற்று I கூற்று II தவறு

(B) கூற்று I சரி ஆனால் கூற்று II தவறு

(C) கூற்று I சரி கூற்று II சரி

(D) கூற்று I தவறு ஆனால் கூற்று II சரி

107. Arrange the following events in Chronological order
கீழே கொடுக்கப்பட்டுள்ள நிகழ்வுகளை கால வரிசைப்படி எழுதுக.

(I) Cripps Mission
கிரிப்ஸ் தூதுக்குழு

(II) Dandi March
தண்டி யாத்திரை

(III) Gandhi Irwin Pact
காந்தி இர்வின் ஒப்பந்தம்

(IV) First Round Table Conference
முதல் வட்டமேஜை மாநாடு

(A) II, III, IV, I
(B) II, IV, III, I
(C) I, II, III, IV
(D) III, II, IV, I
(E) Answer not known
விடை தெரியவில்லை

TNSMART PREP

186. Assertion (A) : Gandhiji opposed the 'Communal Award' of Ramsay MacDonald,

Reason (R) : To get Dominion status from the British.

(A) Both (A) and (R) are correct
(B) (A) is wrong but (R) is correct
(C) (A) is correct but (R) is wrong
(D) Both (A) and (R) are correct and (R) is the correct explanation
(E) Answer not known

கூற்று (A) : ராம்சே மேக்டோனால்ட் வழங்கிய வகுப்புவாரி ஒதுக்கீடை காந்தியடிகள் எதிர்த்தார்.

காரணம் (R) : டொமினியன் அந்தஸ்தை ஆங்கிலேயர்களிடம் இருந்து பெறுவதற்காக.

(A) கூற்று (A) மற்றும் காரணம் (R) இரண்டும் சரி
(B) கூற்று (A) தவறு ஆனால் காரணம் (R) சரியானது
(C) கூற்று (A) சரி ஆனால் காரணம் (R) தவறானது
(D) கூற்று (A) மற்றும் காரணம் (R) இரண்டுமே சரி ஆனால் காரணம் (R) சரியான விளக்கமாகும்

200. All – Bengal Civil Disobedience Council was formed by
அனைத்து வங்காள சட்ட மறுப்பு குழுவை உருவாக்கியவர் ———————— ஆவார்.

(A) Surya sen
சூர்யா சென்
(B) Premananda Dutta
பிரேமனந்தா தத்தா
(C) Ambika Chakrabarty
அம்பிகா சக்ரபார்த்தி
(D) J.M. Sengupta
ஜ.மோ. சென்குப்தா

117. British Journalists ridiculed ———— as the, " Kindergarten stage of Revolution".

———— போராட்டத்தை, "மழலையர் பள்ளியின் மேடைப் போராட்டம்" என பிரிட்டிஷ் பத்திரிக்கைகள் கேலி செய்தார்.

(A) ✓ Dandi March
தண்டி யாத்திரை

(B) Non Cooperation Movement
ஒத்துழையாமை இயக்கம்

(C) Quit India Movement
வெள்ளையனே வெளியேறு இயக்கம்

(D) Bardoli Sathyagraha
பர்தோலி சத்தியாகிரகம்

TNSMART PREP

28. Who presided over the Madras session of the Indian National Congress in 1927?

(A) Badruddin Tyabji (B) Annie Besant
(C) Dr. Ansari (D) Subhash Bose

1927 மெட்ராஸ்-ல் நடைபெற்ற இந்திய தேசிய காங்கிரசுக்கு தலைமை தாங்கியவர் யார்?

(A) பத்ருதின் தியாப்ஜி (B) அன்னிபெசன்ட்
(C) டாக்டர். அன்சாரி (D) சுபாஷ் போஸ்

101. Congress working committee met at __________ and passed a resolution to demand Independence of India.

இந்தியாவிற்கு சுதந்திரம் தர வேண்டும் என்ற தீர்மானத்தை காங்கிரஸ் காரிய கமிட்டி __________ சந்திப்பில் நிறைவேற்றியது.

(A) Delhi
டில்லி
(B) Wardha
வார்தா
(C) Surat
சூரத்
(D) Simla
சிம்லா
(E) Answer not known
விடை தெரியவில்லை

91. Which incident forced Gandhi to start fast unto death in Yerwada Jail in September 1932?

1932 ஆம் ஆண்டு, செப்டம்பர் மாதம் எர்வாடா சிறையில் காந்தி சாகும் வரை உண்ணாவிரதத்தை மேற்க்கொள்வதற்கான முக்கிய காரணமாக சொல்லப்படும் நிகழ்வு எது?

(A) Round Table conference failed to satisfy Indian political aspirations
வட்டமேசை மாநாடு இந்திய அரசியலைத் திருப்திப்படுத்தத் தவறிவிட்டது
(B) Congress and muslim league had difference of opinion
காங்கிரஸ் மற்றும் முஸ்லிம் லீக் இடையிலான மாறுபட்ட கருத்து
(C) Ramsay macdonald announced the communal award
ராம்சே மெக்டொனால்ட் வகுப்புவாத பிரிவினை அறிவிக்கப்பட்டது
(D) None of the above
மேற்கூறிய எதுவும் இல்லை
(E) Answer not known
விடை தெரியவில்லை